*1975 மார்ச் 8]*

ஏற்கப்பட்டு 1974-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது. நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனுதாக்கல் செய்துள்ளார். மேற்கொண்டு நில ஆர்சித நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. இப்பொருள் உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, உயர்நீதி மன்றத்தில் அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது எதிர் மனுத் தாக்கல் செய்யப்பட்டதா? அப்படியென்றால் அதன் விவரம் அறியலாமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மனு (டபிள்யூ. பி. 3726/74) மனுதாக்கல் செய்துள்ளார். மேற்கொண்டு நில ஆர்சித நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும்படி உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. எதிர் ஆணை உறுதிப் பத்திரம் (Draft Counter Affidavit) மாவட்ட ஆட்சியாளரின் கூர்ந்த ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் எதிர் ஆணை உறுதிப்பத்திரம் தாக்கல் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு :—**ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக்குறிக்கும்.)

### 2. நடைமுறைக் கேள்வி.

பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த அறிக்கை குறித்து.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுவதற்கே டைம் இருக்காது, எனவே பாயிண்ட் ஆஃப் ஆர்டர்களையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் தந்த ஒரு விளக்க அறிக்கை பற்றிய பிரச்னை வந்தபொழுது ரூல் 82-ஏ-யின்படி அந்த விவர அறிக்கை தரப்பட்டதாக இங்கே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது 3 ஆம் தேதிய 'ப்ரீஃப் ரிகார்டில்'

"Under Rule 82 of the Tamil Nadu Legislative Assembly Rules, the Hon. Minister for "Public Works" made a statement . . . ."

என்று இருக்கிறது. அன்று சொன்னது, ரூல் 82-லே செய்யப்பட்டது என்று திரும்பத் திரும்ப சொல்லிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள், இல்லை, ரூல் 82-ஏ-யின்படி தான் அந்த ஸ்டேட்மெண்ட் வழங்கப்பட்டது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். இதுதான் சரியான ரெக்கார்ட், இந்த ரெக்கார்டில் ரூல் 82 என்று இருக்கிறது. எப்படி அன்றைக்கு 82-ஏ என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுபற்றிப் பார்த்து பிறகு முடிவு சொல்கிறேன்.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நில ஆக்கிரமிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.